தொழில் நுட்பக் கல்வி இயக்ககம்,
சென்னை – 600 025.

<u>சுற்றறிக்கை எண். 45758 /பி5/2011, நாள். 27.10.2011:-</u>

பொருள்: தொழில் நுட்பக் கல்வி – நிர்வாகம் – 2011–12 ஆம் கல்வி ஆண்டு – முதல் (குளிர் கால) பருவ விடுமுறை அறிவித்தல்.

* * * * *

இத்தொழில் நுட்பக் கல்வித் துறையின் கீழ் இயங்கும் அரசு பல்தொழில் நுட்பப் பயிலகக் கல்லூரிகள், சிறப்புப் பயிலகங்கள் மற்றும் அரசு நிதியுதவி பெறும் பல்தொழில் நுட்பப் பயிலக கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு 28.10.2011 முதல் 28.11.2011 முடிய (இரு நாட்கள் உள்ளிட்டு) 32 (முப்பத்திரண்டு) நாட்கள் 2011–12–ஆம் ஆண்டிற்கான முதலாம் (குளிர் கால) பருவ விடுமுறை அறிவிக்கப்படுகிறது.

பருவ விடுமுறைக்குப்பின் <u>29.11.2011</u> (செவ்வாய்கிழமை) முதல் பயிலகங்கள் மீண்டும் செயல்படத் துவங்கும்.

மைய மதிப்பீட்டுப் பணிக்காக நியமிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு மைய மதிப்பீட்டுப் பணி முடிந்த நாளிற்கு பிறகே பருவ விடுமுறையை அனுமதிக்குமாறு முதல்வர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

அரசு பல்தொழில் நுட்பப் பயிலகக் கல்லூரிகள் மற்றும் சிறப்புப் பயிலகங்களைப் பொறுத்தவரை, பயிலக முதல்வர்கள் பருவ விடுமுறையில் செல்லும் விவரத்தை முன்னதாக ஆணையருக்கு தெரிவித்து, ஆணையரின் <u>முன் அனுமதி பெற்ற பின்னரே</u> பருவ விடுமுறையை துய்க்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

முதல்வர் தவிர மற்ற தகுதி வாய்ந்த அனைவருக்கும் பருவ விடுமுறையை துய்த்தல்/தடுத்தல் தொடர்பாக ஆணைகளை சம்பந்தப்பட்ட பயிலக முதல்வரே வழங்கலாம்.

பருவ விடுமுறை காலத்தில் தேர்வு பணி மற்றும் தேர்வுத்தாள் மதிப்பீட்டுப் பணிக்கு நியமனம் செய்யப்படும் அலுவலர்கள், சம்பந்தப்பட்ட பயியினை தவறாது மேற்கொள்ள வேண்டும்.

ஒம்/– ரமேஷ் சந்த் மீனா,
தொழில் நுட்பக் கல்வி ஆணையர்.

பெறுநர்
முதல்வர்கள்,
அனைத்து அரசு பல்தொழில் நுட்பப் பயிலகங்கள்,
அரசு சிறப்புப் பயிலகங்கள் மற்றும்
அரசு நிதியுதவி பெறும் பல்தொழில் நுட்பப் பயிலக கல்லூரிகள்

நகல்:–
1) தொழில் நுட்பக் கல்வி ஆணையரின் மேஜைக்கு
2) கூடுதல் இயக்குநர் (தேர்வுகள்)
3) கூடுதல் இயக்குநர் (பாலி)
4) உதவி இயக்குநர் (நிர்வாகம்)
5) உதவி இயக்குநர் (தேர்வுகள்)
6) அனைத்து அலகு அலுவலர்கள்
7) அனைத்து பிரிவுக் கண்காணிப்பாளர்கள்/நேர்முக எழுத்தர்கள்
8) பி1,பி2,பி4,பி6
9) தொகுப்பு கோப்பு

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

கண்காணிப்பாளர். 27/10/11
27/10/11